REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

'என் உயிரைக் காப்பாற்றுங்கள்'

"கர்னூலில், ஆந்திர மாநிலத்தின் சட்டசபைக் கட்டிடத்தை எழுப்புவது விசாலாந்திரக் கோரிக்கையை ஒழித்துவிடும்; எனவே, உதவி முதன் மந்திரியின் அந்த முயற்சி, என் உயிருக்கு உலை வைப்பதாகும் என்று நான் அஞ்சுகிறேன்,"

—என்று, விசாலாந்திரக் கோரிக்கைக்காக தன் உயிரையே தியாகம் செய்ய உறுதி பூண்டிருப்பதாகக் கூறப்படும் ராஜா சாமி சூரியநாராயண ராஜூ என்பவர் கூறியிருக்கிறார்.

(4-ம் பக்கம் பார்க்கவும்)

மலர் 3] சென்னை: ஆடி 16உ திங்கள் (1—8—55) ★ ★ வெளியூர்: ஆடி 17உ செவ்வாய் (2—8—55) [இதழ் 4]

'தென்னாட்டைப் புறக்கணிப்பது ஆபத்து!'

'தொழில் வளர்ச்சித் திட்டத்தில் தென்னாட்டிற்கு தனிச் சலுகை வேண்டும்'

'50 ஆண்டு நஷ்டத்தை ஈடுகட்ட என்ன செய்யப்போகிறார்கள்?'

பிரபல தொழிலதிபர் அனந்தராமகிருஷ்ணன் இடித்துரை

சென்னை, ஜூலை 31—

தொழில் மயமாக்குவதில் தொடர்ந்து தென்னாடு புறக்கணிக்கப்படுவது ஆபத்தான ஒன்றாகும்;

"மக்கள் தொகை அடிப்படையில், மாநிலங்களுக்கு இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிதி ஒதுக்கப்பட வேண்டுமென்று, சென்னை நிதிமந்திரி தேசிய அபிவிருத்திக் 'கவுன்சில்' கூட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்;

"இப்படிச் செய்வது நல்லதுதான்; ஆனால், கடந்த 50 ஆண்டு காலமாக, தென்னாடு, தொழில் வளம் பெறவில்லை. அந்தக் காலத்தில் பம்பாயும், வங்காளமும் தொழில் துறையில் எவ்வளவோ முன்னேறியுள்ளன; அந்த வட்டாரங்களின் தொழில் வளர்ச்சிக்குச் சமமானதாக, தென்னாட்டில் தொழில் வளர, சர்க்கார் என்ன செய்யப் போகிறார்கள்?

"எனவே, மக்கள் தொகையை அடிப்படையாக வைத்து இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டிற்கு நிதி ஒதுக்குவது மட்டுமின்றி, தென்னாட்டிற்கு உபரி பங்கு தரப்பட வேண்டும். தென்னாட்டவர் இதனைக் கோருவது நியாயமானதேயாகும்.

"தென்னாட்டிற்கு உருவானது ஏதாகிலும் செய்ய வேண்டிய காலம் நெருங்கிவிட்டது; இல்லாவிட்டால், இன்னும் தென்னாடு தொழில் துறையில் புறக்கணிக்கப்படுவது, ஆபத்தான ஒரு காரியமாகவே இருக்கும்; ஏனெனில், தென்னாட்டில்தான் ஏராளமான அளவு படித்தவர்கள் வேலையற்றிருக்கின்றனர்,"

—என்று, பிரபல தொழிலதிபரான எஸ். அனந்தராம கிருஷ்ணன் எஞ்சினியர்கள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

4,000 'லாரி டிரைவர்'கள் வேலை நிறுத்தம்

பம்பாய், ஆக. 1—

இன்று முதல் காலவரையறையின்றி, பம்பாய் துறைமுகத்திலுள்ள 4,000 'லாரி டிரைவர்'களும், 'கிளீனர்'களும் வேலை நிறுத்தம் செய்யத் தீர்மானித்துள்ளனராம்.

எட்டு போக்குவரத்துக் கம்பெனிக்காரர்கள், கதவடைப்பு செய்தது 800 'டிரைவர்'களுக்கும், 'கிளீனர்'களுக்கும் வேலையின்றிச் செய்ததின் விளைவாகவே இவ்வேலை நிறுத்தம் ஆரம்பமாகிறதாம்.

துப்பாக்கி சுடும் கலை அபிவிருத்தி

இந்தியாவில் துப்பாக்கி சுடும் பழக்கத்தை அபிவிருத்தி செய்ய, தேசிய துப்பாக்கி சுடும் கலைக் கழகம், ரூ. 1,17,41,000 செலவில் ஒரு திட்டத்தைத் தயாரித்துள்ளதாம். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இது சேர்க்கப்படக் கூடும்.

'இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் பேராசை மிகுந்தது'

'ரூ. 5,600 கோடி முதலீடு செய்வது முடியாத காரியம்'

'சர்க்காவும், நூல் நூற்றலும் பயனற்றவை'

வடநாட்டு தொழிலதிபர் பிர்லா குற்றச்சாட்டு

பம்பாய், ஜூலை 30—

"இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 5,600 கோடி முதலீடு செய்ய வேண்டுமென்பது முடியாத காரியமாகத் தோன்றுகிறது;

"இந்த பேராசைத் திட்டத்திற்குத் தேவையான தொழில் நிபுணர்களோ அல்லது அன்னியச் செலாவணியோ இந்தியாவுக்கு இருக்கவில்லை; இந்த இரண்டையும் பொறுத்துத்தான் திட்டமிடப்பட வேண்டும்;

"சுமார் ரூ. 3,000 கோடி முதலீடு மட்டுமே, தேவையான வேலைகளையும், 25 சதவிகித தேசிய வருமான உயர்வையும் தர முடியும்;

"ஒரு கோடி பேருக்கு வேலையும், 25 சதவிகித தேசிய வருமான உயர்வும், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இலட்சியமெனக் கூறப்படுகிறது;

"சர்க்காவும், நூல் நூற்றலும், அல்லது குடிசைத் தொழில்களும், இந்த இலட்சிய எல்லையை அடைய நிச்சயமாக உதவ முடியாது என்று நான் உறுதியாகக் கூறுகிறேன்."

என்று, பிரபல வடநாட்டுத் தொழிலதிபர் ஜி. டி. பிர்லா, இங்கு கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் சொன்னார்:—

"சிறிய தொழில்கள்-ஆடம்பரப் பொருள்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்; என்றாலும், சிறு தொழில் வளர்ச்சியில் அதிகக் கவனம் தேவை என சிலர் வற்புறுத்திக் குரல் எழுப்புகின்றனர்;

"நடுத்தர, சிறு, தொழில்கள் வாழவேண்டுமானால், கனரகத் தொழில்கள் இருந்தாகவேண்டும்;

"பெரும் கனரகத் தொழில்கள்—நடுத்தரத் தொழில்களையும், நடுத்தரத் தொழில்கள்—சிறு தொழில்களையும் வளர்க்க முடியும்;

"இதுபற்றி, எந்த ஒரு அரசியல்வாதியோ, திட்டமிடுபவரோ, தவறு செய்ய முடியாது;

"ஒரு கோடி பேருக்கு வேலை தேடித்தர வேண்டுமென்பதுதான்,—சிறு தொழிலா? பெருந் தொழில்களா?—எதில் அதிக கவனம் செலுத்துவது—என்பதைக் காட்டிலும், மிக முக்கியமானது."

நெசவுத் தொழிற்சாலை மூடுவிழா எதிரொலி!

நகரசபை உறுப்பினர் பட்டினிப் போர்!

100 தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனராம்

கரூர், ஜூலை 29—

நகரசபை உறுப்பினரும், கைத்தறி நெசவாளர் சங்கத் தலைவருமான கே. எஸ். இராமசாமி என்ற சோமு, கடந்த திங்கள் முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கிறார். நகரில் உள்ள நெசவுத் தொழிற்சாலை ஒன்று மூடப்பட்டதின் விளைவாக 100 நெசவாளர்கள் வேலை இழந்து தவிப்பதாகவும், அந்தத் தொழிற்சாலையை மீண்டும் திறக்க வேண்டுமென்பதற்காகவுமே இவர் பட்டினிப் போர் தொடுத்திருப்பதாகவும் கூறப்படுகிறது

'அந்தத் தொழிற்சாலையின் அதிபர் திரும்பவும் தொழிற்சாலையைத் துவங்கி நடத்தாவிட்டால், சர்க்கார் அதனை எடுத்து நடத்த வேண்டும்,' என்று, சோமு கூறியிருக்கிறாராம்.

கோவா பற்றி யூகோ கருத்து

பெல்கிரேட், ஜூலை 30—

"கோவா, இந்திய எல்லைக்குட்பட்ட பகுதி என்பதில் எங்கட்குக் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை; அந்தப் பகுதிக்காக, இந்தியா வெளியிட்டுள்ள கோரிக்கை நியாயமானது; இயற்கையானது; மேலும், இந்தியா அந்தக் கோரிக்கையினை உருவான—அமைதியான வகையில் வெளியிட்டிருக்கிறது,"

என்று, யூகோ வெளிநாட்டு இலாகா அதிகாரி ஒருவர் குறிப்பிட்டிருக்கிறார்.

மன்னார்குடியில் சர்க்கரை ஆலை நிறுவப்படும்?

தஞ்சை மாவட்டத்தில், கூட்டுறவு முறையில் ஒரு சர்க்கரை ஆலையை நிறுவ அவ்வூர் பிரமுகர்கள் பலர் முடிவு செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

ரூ 36 லட்சம் செலவாகுமென மதிப்பிடப்படும் இந்த ஆலையில் நாளொன்றுக்கு 800 டன் கரும்பைப் பிழிந்து சர்க்கரையாக்கப்படுமென்றும், மன்னார்குடியிலாவது அதற்கு அருகிலுள்ள இடத்திலாவது இவ்வாலை அமைக்கப்படலாமென்றும் கூறப்படுகிறது.

'இலங்கை இந்தியர் நிலை மிக நெருக்கடியாகியுள்ளது'

'இலங்கைக் குடியுரிமை பெறும் பிரச்சினையில் டெல்லி தலையீடு தேவை இல்லை'

சென்னை, ஜூலை 31—

"இலங்கை இந்தியருக்கு இலங்கைக் குடியுரிமை கிடைப்பது பற்றிய பேச்சுவார்த்தைகள் எதுவும், இனி, இலங்கை சர்க்காருக்கும்—இலங்கை ஜனநாயகக் காங்கிரசுக்குமிடையில்தான் நேரடியாக நடைபெற வேண்டும்.

"இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் மட்டும்தான், இலங்கைக் குடியுரிமை கோரும் மக்களின் பிரதிநிதியாக விளங்குகிறது; எனவே, இந்தக் குடியுரிமைப் பிரச்சினைக்கு ஏதேனும் பரிகாரம்—உடன்பாடு தேவை என்றால், ஜனநாயகக் காங்கிரசுடன் விவாதிப்பதினால்தான் அது சாத்தியமாகும்.

"இந்தப் பிரச்சினையைப் பொறுத்து இந்தியக் குடியுரிமை கோருவோருக்கு மட்டும்தான் இந்திய சர்க்காரின் உதவி தேவை; அதனால், இந்தியக் குடிமக்களாக விரும்புவோர் பிரச்சினையை மட்டும்தான் இந்திய சர்க்கார் கவனிக்கும் நிலையிலிருக்க முடியும்; எனவே, இலங்கைக் குடியுரிமை பெறும் பிரச்சினையில் சம்பந்தப்பட்டவர்கள் இலங்கை சர்க்காரும், ஜனநாயகக் காங்கிரசும்தான்; இதனை 'கொழும்பு' மட்டுமின்றி, 'டெல்லி'யும் உணர வேண்டுமென நாங்கள் விரும்புகிறோம்."

—இவ்வாறு, இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் தலைவர் எம். ஏ. அஜீஸ் டெல்லியிலிருந்து கொழும்பு செல்லும் வழியில், இங்கு குறிப்பிட்டிருக்கிறார்.

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

பிரெஞ்சு தூதுக் குழு ரஷ்யா செல்லும்

பிரெஞ்சுப் பிரதிநிதிகள் சிலர், சோவியத் ரஷ்யாவிற்கு செல்வதற்கு பிரெஞ்சு சட்டசபையின் நிரந்தரக் 'கமிட்டி' அனுமதி தந்திருக்கிறது.

இதற்கிடையில், ரஷ்யப் பிரதமர் புல்கானின், கம்யூனிஸ்டுக் கட்சிச் செயலாளர் குருஷ்சேவ் ஆகியோரை பிரான்சிற்கு அழைத்து வரவேற்பு தருவது பற்றி சர்க்கார் யோசித்துக் கொண்டிருப்பதாக பிரதமர் பாவ்ரே தெரிவித்திருக்கிறார்.

நிலப் பிரபுக்களுக்கு கடும் வரி விதிப்பு

ஈரான் பார்லிமெண்டின் இரு சபைகளின் கூட்டுக் கூட்டத்தில் பேசுகையில், 'பெரிய நிலப் பிரபுக்களுக்கு கடுமையான வரி விதிக்கும் பல சீர்திருத்த மசோதாக்களைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும்,' என்று பாரசீக மன்னர் வற்புறுத்தினாராம். மன்னரே முன்வந்து, சீர்திருத்தங்களை ஆதரிப்பது, சரித்திரத்திலேயே இச்சம்பவம் முக்கிய நிகழ்ச்சியாகுமாம்!

வருடவாரியில் 28,000 டாலருக்கு மேல் வருமானமுள்ள நிலப் பிரபுக்களுக்கு 50 சத விகிதம் வரி விதிக்கும் முதல் மசோதாவைப் பார்லிமெண்டில் கடுமையாக எதிர்த்திருக்கிறார்களாம்.

நம் நாடு
தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்
சென்னை 1—8—'55 திங்கள்

வருந்தத்தக்கது!

அடிமைப்பட்ட நிலையிலிருந்து ஒரு நாட்டு மக்கள், தங்களை அடக்கி ஆள்பவரின் ஆதிக்கப்பிடிப்பை அகற்றி, விடுதலை பெறுவதுகூட சுலபமாயிருக்கலாம், சில நேரங்களில்; ஆனால், பெற்ற விடுதலையைப் பேணி, அந்த விடுதலை எதற்காகப் போராடிப் பெறப்பட்டதோ அந்த நோக்கம் ஈடேறும் வண்ணம் விடுதலையின் முழுப் பலன்களையும் மக்கள் பெற வேண்டுவது மட்டுமின்றி, அந்த விடுதலை மீண்டும் வேறெந்த ஆதிக்கக்காரர்களாலும் தட்டிப் பறித்துக்கொள்ளப்படாமல் பாதுகாக்கப்படுவதிருக்கிறதே—அது மிகச் சிரமமான ஒன்று என்பதை, பாகிஸ்தானில் நிலவும் அரசியல் சூழ்நிலைகள் சொல்லிக்கொண்டிருக்கின்றன.

பாகிஸ்தானின் உதயம், உலக விடுதலை வரலாற்றில் புதியதொரு அத்தியாயத்தைத் துவக்கி வைத்திருக்கிறது. வெள்ளை ஏகாதிபத்தியத்தின் ஆதிக்கப் பிடியை அகற்றியது மட்டுமின்றி, முஸ்லிம் இன மக்களுக்கென ஒரு பாதுகாப்பையும் தேடித் தந்திருக்கும் அமைப்புத்தான் பாகிஸ்தான் என்று, அந்த அமைப்பினைப் பெற வேண்டியதின் அவசியத்தை உணர்ந்த முற்போக்குவாதிகள் கூறினர்.

ஆனால் பாகிஸ்தான் அமைப்புக்குள் வாழும் மக்கள் அந்த அமைப்பு உருவாகி எட்டாண்டுகளாகியும், தங்களின் எதிர்காலம் இப்படித்தான் அமையும் என்பதைத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில் வைக்கப்பட்டிருப்பதையும், அதற்கான காரணங்களையும் நாம் இங்கு பன்முறை விளக்கியிருக்கிறோம்.

'இருள் சூழ்ந்த வானமாகவே காட்சி தரும் நமதுநாட்டு அரசியலில், தெளிவு எனும் ஒளிபரப்பும் பிறை ஏதும் வளரக்காணோம்; என்று அகலுமோ இந்த இருள்?' என்று ஏக்கங் கலந்த கேள்வி எழுப்பும் பாக். நாட்டு மக்களின் உள்ளம் பற்றியும் எழுதியிருந்தோம்.

தொல்லைகள் பாகிஸ்தான் மக்களைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. அதுவும், இந்தத் தொல்லைகள், பாகிஸ்தான் மக்களின் எதிர்கால அமைப்பு, பாகிஸ்தான் மக்களின் வருங்கால ஆட்சிமுறைக்கான திட்டம் என்பவற்றை வகுக்கும் அடிப்படையிலேயே முளைக்கின்றன என்பதை எண்ணி மக்கள் வருந்துவது நியாயந்தானே?

கடந்த இரண்டு, மூன்று மாத காலத்திற்குமுன், பாகிஸ்தான் அரசியல் நிலைகளில் தோன்றிய சில திருப்திகரமான மாறுதல்கள், பாகிஸ்தான் மக்களின் எதிர்காலம் பற்றி நிலவிய அச்சத்தை, முழுவதுமாக இல்லாவிடினும், சிறிதளவேனும் குறைந்திருப்பதாகக் கூறப்பட்டது.

எட்டாண்டுகளுக்குப் பிறகு சிறையிலிருந்து எல்லைக் காந்தி கான் அப்துல் கபார்கான் விடுவிக்கப்பட்டதும், புதிய அரசியல் நிர்ணய சபை அமைய வழி செய்யப்பட்டதும் கிழக்கு பாகிஸ்தானில் கவர்னர் ஆட்சி ஒழிக்கப்பட்டு, ஜனநாயக ஆட்சி திரும்பவும் நிலைக்க வழிகோலப்பட்டதும், பாகிஸ்தான் மக்களுக்கு, தங்களின் எதிர்காலம் பற்றியிருந்த அச்சத்தைக் குறைக்க உதவின எனலாம்.

ஆனால், கடந்த சமீப காலமாக, பாகிஸ்தானிலிருந்து வந்துகொண்டிருக்கும் செய்திகள், குறைந்துகொண்டு வந்த மக்களின் அச்சத்தைக் கூட்டுவனவாகத்தான் தெரிகின்றன.

அவற்றுள் முக்கியமானது, மேற்கு பாகிஸ்தான் முழுவதையும் ஒருறுப்பாக்கும் திட்டம் பற்றியதுதான்.

'மேற்கு பாகிஸ்தானில் உள்ள நான்கைந்து மாநிலங்களை ஒன்றாக இணைப்பதினால் மட்டுமே, பாகிஸ்தானின் ஐக்கியம் காப்பாற்றப்பட முடியும்'—என்று சிலரும், 'மேற்கு பாகிஸ்தான் மாநிலங்களை ஒரே உறுப்பாக இணைப்பது, ஜனநாயக வளர்ச்சிக்கு உதவ முடியாது—என்று வேறு சிலரும் கூறி வருகின்றனர்.

பாக். வடமேற்கு எல்லை மாநிலத்தில் வாழும் பக்தூன்கள், பாகிஸ்தானியர்களிடமிருந்து வேறுபட்ட இனத்தவர்கள்; அடுத்துள்ள ஆப்கானியர்களை ஒத்தவர்கள்; எனவே, அந்த பக்தூனியர்கள், 'பாகிஸ்தானுடன் இணைந்து வாழமாட்டோம்; நாங்கள் தனித்து-சுதந்திரமாக வாழ்வோம்' என்று ஏற்கனவே கூறி வருகின்றனர். இந்த நிலையில், இந்த பக்தூனியர்கள் வாழும் வடமேற்கு எல்லைப்புற மாநிலத்தையும் சேர்த்து மேற்கு பாகிஸ்தான் முழுவதையும், ஒரே மாநிலமாக்குவது பக்தூனியர்களின் கோரிக்கையைத் தரைமட்டமாக்குவதற்காகவே செய்யப்படுகிறது என்று சிலரும் கூறிவருகின்றனர்.

பக்தூனியர்களின் கோரிக்கையை ஆப்கன் சர்க்கார், தீவிரமாக ஆதரிக்கின்றனர். அதன் அடிப்படையிலேயே, அடுத்தடுத்து இருக்கும் ஆப்கன்—பாக். நாடுகளிடையே ஒரு நல்ல நட்புறவு இல்லை

எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு சிறையிலிருந்து வெளிவந்துள்ள எல்லை காந்தி கான் அப்துல் கபார்கான், மேற்கு பாகிஸ்தான் ஒருறுப்புத் திட்டத்தை எதிர்க்கிறார்; அத்துடனுமல்லாமல், 'இப்போதுள்ள அரசியல் நிர்ணய சபை, மக்களின் பிரதிநிதித்துவம் அற்றது; எனவே அதனைக் கலைத்துவிட்டு, மறு தேர்தல் நடத்த வேண்டும்' என்று அவர் கருத்தறிவித்திருக்கிறார்.

அதனை ஒட்டி, பாகிஸ்தான் உள்நாட்டு மந்திரி இஸ்கந்தர் மீர்சா, கபார்கான் நாட்டு மக்களிடை தவறான பிரசாரத்தில் ஈடுபடுவதாகக் கூறி அவர்மீது கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிறார்.

கிழக்குபாகிஸ்தானில் உள்ள பஸ்லுல்ஹக், சுகரவர்த்தி போன்றவர்கள், பாகிஸ்தான், முகம்மது அலியின் தலைமையில் இருப்பதை விரும்பவில்லை என்று ஒரு செய்தி கூறுகிறது.

கவர்னர் - ஜெனரலாயிருக்கும் குலாம் முகம்மது, நாட்டிலிருந்து இந்த நிலைகளை எல்லாம் கவனிக்க முடியாத நிலையில் உடல் நலம் குன்றி, அடிக்கடி வெளிநாடுகளில் தங்கவேண்டியவராயிருக்கிறார்; எனவே, அவருக்கு உதவியாளராக ஒரு துணை கவர்னர் - ஜெனரல் நியமிக்கப்பட வேண்டும் என்று, செய்தி ஒன்று கோருகிறது.

இப்படியாக, தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்கும் செய்திகள், பாக். மக்களின் அச்சத்தை வளர்ப்பனவாகத்தான் தெரிகின்றனவே தவிர, அவர்களுக்கு உறுதியான எதிர்கால வாழ்வமைப்பில் நம்பிக்கை ஊட்டக்கூடியனவாக அமையவில்லை என்பது வருந்தத்தக்கது.

இந்திய சுதந்திரதினத்தன்று

பாகிஸ்தான் கொடி ஏற்றியவர்கள்

18 மாதக் கடுங்காவல்—ரூ. 200 அபராதம் விதிக்கப்பட்டனர்

ஐதராபாத், ஜூலை 28—

முகம்மது உசேன், மஃபூப் அலி என்ற இரு பாகிஸ்தானியர்கள் சென்ற ஆண்டு ஆகஸ்டு திங்கள் 27-ந் தேதியன்று, குல்பர்கா நகரில், கணேஷ்மந்திர் எனுமிடத்தில் பாகிஸ்தான் கொடியைப் பறக்கவிட்ட குற்றத்திற்காக 18 மாதக் கடுங்காவல் தண்டனையும், ரூ 200 அபராதமும் — கட்டத்தவறினால் மேலும் 4 மாதக் கடுங்காவல் தண்டனையும் விதிக்கப்பட்டிருக்கின்றனர்.

வகுப்புத் துவேஷத்தை மூட்டவும், சதி செய்யவும் முற்பட்டதாக அந்த இருவர் மீதும் வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

கடந்த ஆண்டு சுதந்திரத் தினத்தன்றும், அடுத்த நாட்களிலும் மாநிலத்தின் பல பகுதிகளில் பாகிஸ்தான் கொடி பறக்கவிடப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றன.

எளிதாக முறிந்து விடாத உறவு!

“சோவியத் யூனியனுக்கும்—மேற்கத்திய வல்லரசுகளுக்கும் உள்ள உறவு எளிதாக முறிந்து விடாதபடி ஜினீவா மாநாடு செய்துவிட்டது; ஆகலால் யுத்தம் தோன்றுமென்று அஞ்சாமல், இராஜ தந்திர முறையில் பொறுமையாய் நமது வேறுபாடுகளைப் பற்றிப் பேசலாம்,” என்று அமெரிக்க வெளிநாட்டுக் காரியதரிசி டல்லஸ், நிருபர் மாநாட்டில் கூறினார்.

யுரேனியத் தாதுப் பொருள்கள்

ம. பி.-யில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனவாம்

நாகபுரி, ஜூலை 29—

மத்திய பிரதேசத்தில் உள்ள பெதூல் மாவட்டத்தில், கீழ்ரக யுரேனியம் கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

மத்திய அரசாங்க இயற்கைவள ஆராய்ச்சி இலாக்காவின் அணு சக்திப் பிரிவினைச் சேர்ந்த ஒரு பூதத்துவ நிபுணர் அந்த இடத்திற்கு வருகை தந்து, அங்கு கிடைக்கும் யுரேனியத்திலிருந்து மாதிரிக்காக கொஞ்சம் எடுத்துச் சென்றுள்ளதாயும், அங்கு யுரேனியத் தாதுப் பொருள்களைத் தோண்டி எடுப்பது சாத்தியமா என்பது குறித்து ஆராய்ச்சி நடத்தப்படும் என்றும் தெரிகிறது.

கோஷ்டி மனோபாவத்தை காங்கிரஸ் மேலிடம் சகித்துக்கொள்ளாதாம்!

கடுமையாக நடவடிக்கை எடுத்துத் தொலைத்துவிடுமாம்!

ஐதராபாத், ஜூலை 29—

“காங்கிரஸ் அமைச்சரவைக்குள்ளாக கோஷ்டி மனோபாவம் ஆட்டம் போடுவதை இனிமேல் காங்கிரஸ் மேலிடம் சகித்துக் கொள்ளாது. அடுத்தடுத்து கிளம்பும் இந்தக் காணத்தகாத ஆட்டத்தைக் கண்டு காங்கிரஸ் மேலிடம் பெருங் கவலை கொண்டிருக்கிறது. கடுமையான நடவடிக்கை எடுத்துத் தொலைத்துவிடுவது என்று முடிவு கட்டிவிட்டது காங்கிரஸ் மேலிடம்.”

—இந்த எச்சரிக்கையை ஆணித்தரமாக காங்கிரஸ் பொதுச் செயலாளர் மாதவன் நாயர் கூறி இருக்கிறார்.

ஐதராபாத் மாநிலத்திலுள்ள மாவட்டங்களின் காங்கிரஸ் தலைவர்கள், செயலாளர்கள் கூடிந்த இரண்டுநாட்களாக மாநாடு கூட்டி இருக்கின்றனர். மேற்படி மாநாட்டில் கலந்துகொண்டு மேற்படி எச்சரிக்கையை மாதவன் நாயர் விடுத்திருக்கிறார்.

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட காங்கிரஸ் செயற்குழுவிடம் பொறுப்பை ஒப்படைக்காத முன்னாள் காங்கிரஸ் குழுவினருக்கும் கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளார் மாதவன் நாயர்.

காங்கிரஸ்காரருக்கு

பி. சி. ராய் உபதேசம்

பம்பாய், ஜூலை 27—

“காங்கிரஸ்காரர்களிடையே அவநம்பிக்கையும், பொறாமையுமிருக்கக்கூடாது என்று எச்சரிக்கிறேன். அவநம்பிக்கைக்குப் பிறகு வெறுப்பு ஏற்படுகிறது; அதைத் தொடர்ந்து அச்சம் தோன்றுகிறது; ஒரு மனிதனை அச்சம் பீடித்துக் கொண்டால், அவன் தன்னம்பிக்கை இழக்கிறான்; தன்னம்பிக்கைதான் நாட்டை உயர்த்த—உருவாக்க முடியும்.”

என்று, மேற்கு வங்க முதல் மந்திரியான டாக்டர் பி. சி. ராய் குறிப்பிட்டிருக்கிறார்.

விஞ்ஞானம் வளருகிறது!

பாதைகள் அமைக்க ரப்பர் பயன்படும்

இரயில் பிரயாணத்தில் ஏற்படும் அதிர்ச்சியும் குறையுமாம்!

பாதைகள் அமைப்பதில் ரப்பர் சிறப்பாகப் பயன்படுவதாகக் கூறப்படுகிறது. சென்ற ஆண்டில் ஒரு சில காமன்வெல்த் நாடுகளிலும், அமெரிக்காவிலும், ரப்பர் தளமிட்ட 108 ரோடுகள் பரீட்சார்த்தமாக அமைக்கப்பட்டன.

இந்தியா போன்ற வெப்பப் பிரதேச நாடுகளில் ரப்பர் கலந்த பிடுமன்' (தார்) உபயோகிப்பது பற்றி சோதனை நடத்தியதில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது

இரயில்வே தண்டவாளங்களில், தண்டவாளத்திற்கும், ஸ்லீப்பர் (இணைப்புக்) கட்டைக்கும் நடுவில் ரப்பர் அட்டைகள் வைப்பதால், அதிர்ச்சி குறைவதுடன், தண்டவாள நிர்வாகச் செலவிலும் கணிசமான அளவுக்கு சிக்கனம் செய்ய முடியும் எனக் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

தண்டவாளத்தில் ரப்பர் அட்டைகளைப் பொருத்தும் சோதனையை பிரிட்டனில் நடத்தினார்கள். இரயில்வேயில் வேறு பல இயந்திரங்களிலும் ரப்பரை உபயோகித்து சோதனை செய்து வருகிறார்கள். இவை வெற்றி பெற்றால் ரப்பருக்கு நிரந்தர மார்க்கெட் கிடைப்பதுடன், செயற்கை ரப்பர் போட்டியையும் சமாளித்துவிட முடியும்.

★

ஒரேதடவையில் 100 டன் மண் வாரிக்கொள்ளும் கருவி

நூறு டன் மண்ணை ஒரே தடவையில் வாரும் கருவி ஒன்று அமெரிக்காவிலுள்ள ஒரு பெரிய நிலக்கரிக் கம்பெனியால் செய்யப்பட்டுள்ளது. தரையில் மிகவும் அடியிலுள்ள நிலக்கரியை அதைக்கொண்டு எடுக்கலாம் என்று கருதி அதை அமைத்திருக்கிறார்கள். இந்தப் பெரிய மண்வாரி நிலக்கரிப் பிழம்புகளுக்கு மேலேயுள்ள மண்ணை வாரி எடுத்தபின், சிறிய மண்வாரிகளைக் கொண்டு நிலக்கரியை எடுக்கலாம்.

அணுசக்தி ஆராய்ச்சி நூல்கள்

23 நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாம்!

அணுசக்தியையும், அதனை சமாதான காலத்தின் ஆக்கவேலைகளுக்குப் பயன்படுத்தவதையும் பற்றிய தொழில் நுட்ப நூல்கள், 23 நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக அணுசக்தி குழு அறிவித்துள்ளது.

ஒவ்வொரு நூல் தொகுதியிலும் 6,500 ஆராய்ச்சி அறிக்கைகள் அடங்கியுள்ளன; அவற்றுள் சிறிய அளவில் படம் பிடித்து வைக்கப்பெற்றுள்ள 5,000 கார்டுகள்; பலவகைப்பட்ட 22 புத்தகங்கள்; அணுசக்தி பற்றிய விஞ்ஞான விவரங்கள் அடங்கிய 34 புத்தகங்கள்; அமெரிக்காவிலும், மற்ற நாடுகளிலும் வெளியான 50,000 அறிக்கைகள் கொண்ட 11 புத்தகங்கள்—அதில் உள்ளன.

இந்தப் புத்தகங்கள்—அணு உலை, அணு பௌதிகம் பற்றி மட்டுமல்ல—இரசாயனம், உலோக இயல், விவசாயம், சுகாதாரம் முதலியவற்றிற்கு அணுவால் ஏற்பட்டிருக்கும் பயன்களையும் தெரிவிக்கிறது.

இந்தியா, இத்தாலி, ஸ்பெயின், ஆஸ்திரேலியா, சுவீடன், கிரீஸ், எகிப்து, பர்மா, டென்மார்க், ஆஸ்திரியா, பிலிப்பைன்ஸ், பின்லாந்து, துருக்கி, நெதர்லாந்து, போர்ச்சுக்கல், நியூசிலாந்து முதலிய நாடுகளுக்கு இவை அனுப்பப்பட்டுள்ளன.

புதுப்புது விதமான அணு ஆயுதங்கள்

அமெரிக்கா தயாரிக்கிறதாம்!

கடந்த ஆண்டு, பசிபிக்கில் நடத்திய நீர்வளிக் குண்டு சோதனைகளின் பயனாகக் கிடைத்துள்ள தகவல்களை ஆதாரமாக வைத்து, அமெரிக்கா பல புதுரக அணு ஆயுதங்களைத் தயாரிக்க முற்பட்டுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

1955-ம் ஆண்டின் முதல் ஆறு மாதத்தில் அணுசக்தி அபிவிருத்தி பற்றி அணுசக்திக் ‘கமிஷன்’ காங்கிரசுக்கு தாக்கல் செய்த அறிக்கையிலேயே இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

அணுசக்தியால் ஓட்டப்படும் விமான அபிவிருத்திக்கான சாத்தியக் கூறுகளும், வெகுவாக, நம்பிக்கை தருகின்றன என்றும் ‘கமிஷன்’ தனது அறிக்கையில் கூறுகிறது.

'கோயில் குளத்தை சுத்தம் செய்யாதே'

நகர சபை அதிகாரிக்கு அரசாங்கக் கட்டளை!

சென்னை, ஜூலை 29—

சென்னை மைலாப்பூரிலுள்ள கபாலீசுவரர் கோயிலில் உள்ள குளத்தில், தாமரை இலைகள் அனைத்தையும் அப்புறப்படுத்தி, குளத்தைச் சுத்தம் செய்யவேண்டுமென்று சென்னை நகர சபை கமிஷனர் கோயில் நிர்வாகிகளுக்கு அறிவிப்புக் கொடுத்திருந்தார் என்பது நினைவிருக்கலாம்.

ஆனால் தற்போது சென்னை சர்க்கார், இது விஷயத்தில் நகர சபை எந்தவித நடவடிக்கையும் எடுக்க வேண்டாமென்று கேட்டுக் கொண்டு நகர சபைக் கமிஷனருக்குத் தாக்கீது ஒன்றை அனுப்பியுள்ளதாம்.

அந்தப் பிரச்சினையில், ஒரு இறுதி முடிவு மேற்கொள்ளப்படுவதற்குள்ளாக, நகர சபை கமிஷனரும், மேற்படி கோயில் அதிகாரிகளும் சேர்ந்து பரிசீலனை செய்யவேண்டுமென்றும் சர்க்கார் குறிப்பிட்டிருக்கிறதாம்

சென்ற ஜூன் திங்கள் 10-ந் தேதியன்று, கமிஷனர், மேற்படி குளத்தில் தாமரை இலைகள் அடர்ந்து கிடப்பதால் சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் என்ற முறையில் அவற்றை அகற்றிவிடுவதுடன், குளத்தில் வாடும் மீன்களையும் அப்புறப்படுத்திவிட வேண்டுமென்றும், இதனை, ஒரு வார காலத்திற்குள் செய்யாவிட்டால், நகர சபையினரே மேற்கண்ட வேலையைச் செய்ய முற்படுவதுடன், கோயில் அதிகாரி மீது தக்க நடவடிக்கையும் எடுக்கப்படும் என்றும் தமது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

ஆனால், இந்துமத பரிபாலனக் குழு கமிஷனர், மேற்படி பிரச்சினையில் இறுதி முடிவு காணும் வரை, நகர சபை கமிஷனரின் நடவடிக்கைகள் நிறுத்திவைக்கப்படவேண்டுமென்றும், தாமரைச் செடிகளை அப்புறப்படுத்தக் கூடாதென்றும், மலேரியா நோய்க் கிருமிகளை அழிக்கக் கூடிய மீன் வகைகளை, தங்கள் உணவாகக் கொள்ளும் மற்ற வகை மீன்கள் அனைத்தும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன என்றும் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறார்.

மேலும், அக்குளத்திலுள்ள தாமரை மலர்கள் கோயிலிலுள்ள சிலைகளுக்கென உபயோகிக்கப்படுபவையாதலின் அவை புனிதத் தன்மை வாய்ந்தவையென்றும், அத்துடன், அதிகப்படியான மலர்களை ஏலத்தில் விடுவதின் மூலம், கோயிலுக்கு ஆண்டொன்றில் ரூ. 3,000 வருமானம் கிடைக்கிறதாகவும் சர்க்காருக்குச் சுட்டிக்காட்டப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

மேட்டூர் கால்வாயை விரிவுபடுத்துக!

சேலம் மாவட்ட காங்கிரஸ் கோரிக்கை

சேலம், ஜூலை 30—

சேலம் பகுதியில் திருச்செங்கோடு தாலுகாவிற்கும் அப்பால் கொக்கராயன்பேட்டை வரையிலும் மேட்டூர் கால்வாயை விரிவுபடுத்தவேண்டுமென்று, சேலம் மாவட்ட காங்கிரஸ் செயற் குழு மாநில சர்க்காரை வற்புறுத்தியிருப்பதாகக் கூறப்படுகிறது.

இங்கு நடைபெற்ற காங்கிரஸ் குழுக் கூட்டமொன்றில், மேலும், மிட்டாதாரர்களுடைய நிலங்களையெல்லாம் சர்க்கார் எடுத்துக் கொண்டுள்ளதால், ஏழை விவசாயிகளின் கால்நடைகள் மேய்ச்சலுக்கு அந்நிலங்களில் அனுமதிக்கப்படவில்லை என்றும், எனவே, முன்னாள் மிட்டாக்களுடைய காடுகளையெல்லாம் இலவசமாக, கால்நடைகளின் மேய்ச்சலுக்காகத் திறந்துவிடவேண்டுமென்றும் சர்க்காரைக் கேட்டுக் கொண்டுள்ளது

இது தவிர, வடசேலத்தில், யுத்தக் காலத்தில் துண்டிக்கப்பட்ட இரயில் போக்குவரத்துப் பாதைகளை மீண்டும் நிர்மாணிக்கவேண்டுமென்றும், சேலத்திலிருந்து ராசிபுரம், நாமக்கல் ஆகிய இடங்கள் வழியாக திருச்சிக்கு ஒரு புதிய இரயில்பாதை போடப்படவேண்டுமென்று கேட்டுக்கொண்டும் அக்கூட்டத்தில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது

கனுங்கோ குழுவின் சிபாரிசுகள் குறித்துத் தனது வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்வதாகவும் அக்கூட்டம் தீர்மானித்துள்ளதாம்!

'ஆசிரியர் தொழில் வைர வியாபாரம் போன்றது'

கல்வித்துறைத் தலைவர் கூறுகிறார்

தென்காசி, ஜூலை 31 —

“ஆசிரியர்கள், குறைந்த ஊதியம் பெறுகிறோம் என்று வெட்கப் படக்கூடாது; அவர்கள் தலை நிமிர்ந்து, தன்னம்பிக்கையுடன், 'நானும் உழைப்பேன்' என்று கூறுபவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியர்களையெல்லாம் 'வைர வியாபாரிகள்' என்றே சொல்ல வேண்டும்; ஒரு வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு தடவைகள்தான் வைரவியாபாரம் நடைபெறும். ஆனால், தவிடு வியாபாரமோ தினம் தினம் நடைபெறுவதாகும்.

“கல்லூரியில் பயின்ற காலை நான் செய்த செலவுகளில் பாதி கூட. நான் வேலைக்கு வந்த பின்னர் கிடைக்கவில்லை. பத்திரிகைத் தொழிலில் 35 ரூபாய் ஊதியத்திற்குக்கூட வேலை செய்திருக்கிறேன்.

“நாம் எல்லோரும் சேர்ந்து வாழ வேண்டும்; இப்பொழுதே அவ்வாறு சேர்ந்து வாழக் கற்றுக் கொள்ளவேண்டும். இதற்குத் தேவையான எல்லாம் ஆசிரியர்கள் கையில்தான் இருக்கிறது. 'எல்லோரும் ஒரு குலம்—ஓர் இனம்' என்ற மனப்பான்மை இருக்க வேண்டும்.”

இவ்வாறு, சென்னை மாநில கல்வித் துறைத் தலைவர் நெ. து சுந்தரவடிவேலு, தென்காசியில் இத்திங்கள் 28-ந் தேதியன்று நடைபெற்ற தென்காசி ஆரம்ப ஆசிரியர் சங்கத்தின் ஆண்டு விழாவிற்குத் தலைமை தாங்கி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அண்ணாமலை பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு

வேலைகள் பற்றிய விபரங்கள்

பேராசிரியர் வி. ஜி. இராமகிருஷ்ணனைத் தலைவராகக் கொண்ட அண்ணாமலை பல்கலைக் கழக ஆராய்ச்சிக் குழு, பட்டு, பஞ்சு ஆகியவை சமமந்தமாக, தான் மேற்கொண்டு வந்த கைத்தறித் தொழிற் பயிற்சி பற்றிய தனது 'சர்வே'யை முடித்துக் கொண்டுள்ளதாம்; அக்குழுவின் அறிக்கையும், திட்டக் குழுவின் அறிக்கைகளும் ஆராயப் பெற்று வருகின்றனவாம்.

இந்தக் குழு, திட்டக் குழுவின் ஆராய்ச்சித் திட்டக் குழுவின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டிருக்கிறதாம். இக்குழு, சேலத்தில் சுமார் 6 திங்கள்களாகத் தங்கியிருந்து 'சர்வே'யை நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது

சேலம் மாவட்டத்தில் வெல்லம் உற்பத்தி, பாய்முடைதல், கம்பள நெசவு போன்ற சிறுகைத் தொழில்கள் பற்றிய 'சர்வே'யை, குழு, இப்போது ஆரம்பித்திருப்பதாகவும், உற்பத்தி, மார்க்கெட்டிங், வேலை, நிதி ஆகியவை பற்றிய நிலைமைகள் குறித்துப் புள்ளி விவரங்களைச் சேகரிக்கும் என்றும், இது குறித்து இன்னும் 3 திங்கள்களுக்குள் குழுவின் அறிக்கை வரும் என்றும் கூறப்பட்டிருக்கிறது.

கணவனால் கைவிடப்பட்ட பெண்மணி!

அகமதாபாத், ஜூலை 30—

தொட்டுத் தாலி கட்டிய தன்னை கணவன் மறந்துவிட்டான்—வெறுத்துவிட்டான்; என்றாலும், மனைவி கணவனுடன் தொடர்ந்து வாழ எண்ணினாள்.

தன்னை ஏற்றுக்கொள்ள மறுத்த கணவனை விரும்பிக் கேட்டிருக்கிறாள்.

கணவன் ஒரு இரயில்வே தொழிலாளி; அவன் வேலை செய்யும் இடத்திற்குச் சென்று, மனைவி, விடாப்பிடியாக 15 நாட்கள் தங்கி 'வேலை நிறுத்தம்' செய்தாள்; மண்டியிட்டு மன்றாடினாள்; கணவனோ ஏற்றுக்கொள்வதாகக் காணோம்.

மனம் உடைந்தாள்; ஓடும் ரயிலில் விழுந்து உயிரை மாய்த்துக் கொள்ள எண்ணினாள்.

ஆனால்.........!

அவளை சில சமூக ஊழியர்கள் காப்பாற்றி, பெண்கள் இல்லம் ஒன்றில் சேர்த்திருக்கின்றனர்.

கணவனின் பிடிவாதத்தால் மனம் வெதும்பிய நிலையில், அப்பெண்மணி அழுதுகொண்டே, அந்த பெண்கள் இல்லத்தில் அடைக்கலம் புகுந்தாள்.

திரைப்படக் கொட்டகை முன் போலீசார் தடியடி

குண்டூர், ஜூலை 29—

குண்டூரிலுள்ள ஒரு திரைப் படக் கொட்டகையில், ஒழுங்கற்ற முறையில் பெருங் கூட்டமாக மக்கள் கூடி நின்று, போக்குவரத்துக்கு இடைஞ்சல்கள் விளைவித்ததால் அவர்களை கலைப்பதற்காக போலீசார் தடியடிப் பிரயோகம் செய்ததாகவும், அதன் விளைவாக பெண்களும், சிறுவர்களும் உட்பட பலர் காயமுற்றனர் என்றும், சிலர் படுகாயப்பட்டனர் என்றும் தெரியவருகிறது.

அந்தத் திரைப்படக் கொட்டகையில், 'ரோசுலு மாராயி' எனும் தெலுங்கு சமூகத் திரைப்படத்தின் நூறாவது நாள் விழாவையொட்டி, மேடை மீது, அத்திரைப்பட நடிக, நடிகையர் தோன்றுவர் என்று கூறப்பட்டதாகவும், எனவே நடிக, நடிகையரைக் காணும் ஆவலுடன், பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் பெருந்திரளாக மக்கள் கூடி கொட்டகை வாயிலில் நின்று கொண்டதாகவும், அதன் விளைவாக போக்குவரத்துக்கள் அனைத்தும் தடுக்கப்பட்டு நிலை நின்றுவிட்டன என்றும், போக்குவரத்தைச் சீர்ப்படுத்தி, மக்களை கலைக்கவே போலீசார் தடியடிப் பிரயோகம் நடத்தியதாகவும் செய்தி கூறுகிறது.

52இடங்களில் 51இடங்கள் மூவர்கூட்டணிக்கு

மலேயா தேர்தல் இறுதி முடிவுகள்

கோலாலம்பூர், ஜூலை 28—

மலேயாவில் நடைபெற்ற தேர்தல்களில் மலேய—சீன—இந்தியக் கூட்டணிக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது.

சட்டசபைக் கவுன்சிலின் மொத்த 52 இடங்களில், அந்தக் கூட்டணி, 51 இடங்களைப் பிடித்திருக்கிறது.

இஸ்லாமியக் கூட்டணிக்கு ஒரே ஒரு இடம்தான் கிடைத்திருக்கிறது!

முக்கியமான எதிர்க் கட்சியாக அமையக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட 'நகாரா' கட்சிக்கு ஒரு இடம்கூடக் கிடைக்கவில்லை!

சட்டசபையில் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள 52 உறுப்பினர்களுடன் நியமிக்கப்படும் 46 உறுப்பினர்களும் இருப்பர்.

ஒன்பது பேர்கொண்ட மந்திரி சபையில் 6 மலேயர்களும், 3 சீனர்களும் இருப்பர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மலேயா கூட்டணியின் வெற்றியைப் பாராட்டி சிங்கப்பூர் பிரதமர் டேவிட் மார்ஷல் தந்தி அனுப்பியிருக்கிறார்.

தொழிலாளர் முன்னணிக் கட்சி (மார்ஷல் டேவிடின் கட்சி) மலேயா முக்கூட்டணி ஆகியவற்றின் தலைவர்கள் சீக்கிரமே சந்தித்து, பொதுப் பிரச்சினைகள் பற்றி ஆலோசிப்பர் என்று தெரியவருகிறது.

300 நல்ல பாம்புகள்!

காடுகளிலிருந்து வீடுகளுக்குக் கொண்டு வரப்பட்டனவாம்!

சங்லி, ஜூலை 26—

'நாகபஞ்சமி' என்ற திருநாள், வடநாட்டில் நடைபெறுவதுண்டு

ஷிராலா எனும் கிராம மக்கள், 'நாக பஞ்சமி' திருநாளைக் கொண்டாட என்ன செய்தனர் தெரியுமா?

சுமார் 300 நல்ல பாம்புகளைக் காட்டிலிருந்து வீடுகளுக்குப் பிடித்து வந்து 'பூஜை' நடத்தியிருக்கின்றனர்.

வேடிக்கை என்னவென்றால், “'நாக பஞ்சமி' தினத்தன்றும், அதற்கு முதல் நாளும் பக்தியுள்ள எவரையும் பாம்புகள் கடிக்க மாட்டா” என்ற புராணக்கதையை இந்த விழாவைக் கொண்டாடுபவர்கள் நம்புவதுதான்!

ஆண்டுதோறும் அந்தக் கிராமத்தைச் சேர்ந்த சுமார் 400 இளைஞர்கள், அருகில் உள்ள காடுகளிலும். குன்றுகளிலும் சென்று இந்த பாம்பினங்களைப் பிடித்து வருவராம்.

இந்தப் பாம்புகள், திருநாளன்று மண்பானைகளில் வைக்கப்படுமாம்!

பாலை உணவாக அவைகளுக்குத் தந்தபின், இந்தப் பாம்புகளை வீதிகளில்விட்டு, வேடிக்கையும் காட்டுவார்களாம்—அந்தக் கிராம மக்கள்!

அந்த வேடிக்கையை பார்ப்பதற்காக ஒவ்வொரு ஆண்டும் சங்லி, கோலாப்பூர், சதாரா, கராத் முதலிய இடங்களிலிருந்தெல்லாம் மக்கள் கூட்டம் கூட்டமாக வருவார்களாம்.

பம்பாய் மருத்துவத் துறைத் தலைவர் டாக்டர் பி. பி. தீட்சித், இந்த ஆண்டு. வேடிக்கை பார்க்க வந்திருந்த சுமார் மூவாயிரம் பேர்களில் ஒருவராம்.

வேடிக்கைக்குப் பிறகு, பாம்புகள், அன்று மாலையே காடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, அங்கே விடுவிக்கப்படுகின்றனவாம்.

இந்த ஆண்டு 'நாகபஞ்சமி'யின் போது, பாம்புகள் எவரையும் கடித்ததாக தகவலே இல்லை என்றும் கூறப்படுகிறது!

கிண்டியில் 'டெலிவிஷன்' செட்

சென்னை, ஜூலை 28—

கிண்டி எஞ்சினீயரிங் கல்லூரியில் 'டெலிவிஷன் செட்' விரைவில் வைக்கப்படவிருக்கிறது. ஒலி பரப்பு சம்பந்தமான பாடங்களில் மாணவர்களுக்குப் போதனை அளிக்க இந்த செட் வைக்கப்பட இருக்கிறது.

இந்தியாவில் 'டெலிவிஷன்' வைக்கப்படும் இரண்டாவது கல்லூரி இதுதான்.

மத்தியப் பிரதேச மாநில எஞ்சினீயரிங் கல்லூரியில் டெலிவிஷன் செட் இயங்கி வருகிறது.

ரஷ்யாவுக்கு ஏற்றுமதி

இந்தியாவிலிருந்து ரஷ்யாவுக்கு ஏற்றுமதியான பொருள்களின் மொத்த மதிப்பு 1953—54-ம் ஆண்டில் ரூ. 1.15 கோடியாக இருந்தது, 1954—55-ம் ஆண்டில் ரூ. 2 11 கோடியாக உயர்ந்துவிட்டது; ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்கு இறக்குமதியான பொருள்களின் மொத்த மதிப்பு 1953—54-ல், ரூ. 59.7 லட்சமாக இருந்தது—1954—55-ம் ஆண்டில் ரூ. 1.61 கோடியாக அதிகரித்துவிட்டது.

பாம்பு கடிக்குப் புதிய மருந்து!

300 பேருக்கு சிகிச்சை: அனைவரும் உயிர்தப்பினராம்

மலாயா டாக்டரின் கண்டுபிடிப்பு

பாம்புக் கடிக்குப் புதிய மருந்தொன்று கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாயும், அம்மருந்தை உபயோகித்தால் பாம்புக்கடியின் விளைவாக உயிர்ச் சேதம் எதுவும் நேரிடாது என்றும், மலாயாவைச் சேர்ந்த டாக்டர் அப்துல் வகாப் ஆரிப் என்பவர் தெரிவித்திருக்கிறார்.

மலாயாவிலுள்ள பாம்புகளில் 'பிட் வைப்பர்' எனப்படும் பாம்புகள் மிகுந்த நச்சுத் தன்மை வாய்ந்தவை என்றும், அவ்வகைப் பாம்புகள் கடித்தால், கடிக்கப்பட்ட நேரத்திலிருந்து 24 மணி நேரத்திற்குள்ளாக இறந்துவிட நேரிடும் என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் டாக்டர் அப்துல், மனிதஉடலிலுள்ள 'பிருக்கங்க'ளிலுள்ள சில நுண்ணிய பாகமாகிய 'கார்டிஜன்' எனப்பெயர்படும் பொருட்களால், பாம்புக்கடி விஷத்தைப் போக்கிவிடலாம் என்று தெரிவித்திருக்கிறார்.

'கார்டிஜன்' என்ற பெயரிய சத்துப் பொருள்கள், மாத்திரை உருவில், பாம்பு கடிக்கப்பட்டவர்களுக்கு அவர்களது வயதுக்கு ஏற்றபடி கொடுக்கப்பட்டால் மரணத் தருவாயினின்றும் அவர்கள் காப்பாற்றப்படலாம் என்று குறிப்பிட்டிருக்கிறார்.

'கார்டிஜன்' என்ற அப்பொருள், உடலில் கலந்ததும், பாம்பின் நச்சுத்தன்மை 'இறந்து' விடுகிறதென்றும், இதற்கு முன்னர் இதற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட எல்லா மருத்துவ முறைகளும் 'பயனற்றவை'யாகி விட்டன என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'பிரிட்டிஷ் மெடிகல் ஜர்னல்' என்ற இதழில் எழுதியுள்ள ஒரு கட்டுரையில், அவர், கடந்த ஆண்டு (1954) மார்ச்சு மாதத்திலிருந்து இதுவரையிலும் சுமார் 800 பேருக்குப் பாம்பு கடி மருத்துவம் செய்ததாகவும், அந்த 300 பேருக்கும் 'கார்டிஜன்' மருந்தையே கொடுத்ததில் எல்லோரும் உயிர் பிழைத்தனர் என்றும் எழுதியிருக்கிறார்.

“உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு மிக மிகத் தேவையான மருந்து 'கார்டிஜன்'தான்” என்றும் அவர் அக்கட்டுரையின் இறுதியில் குறிப்பிட்டிருக்கிறார்.

ரஷ்ய மிருகக் காட்சி சாலைக்கு

நேருவின் பரிசு

பெங்களூர், ஜூலை 29—

ரஷ்யாவிற்கு, இந்தியாவிலிருந்து இரண்டு யானைகள் அனுப்பப்படும்.

பண்டித நேரு மாஸ்கோ மிருகக் காட்சி சாலைக்குச் சென்றிருந்த போது, இரண்டு யானைகள் பரிசளிப்பதாக வாக்களித்திருந்தாராம்.

ஒரு யானை மைசூரிலிருந்தும், மற்றொன்று குடகிலிருந்தும் ஆக இரு யானைகள் ரஷ்யாவிற்குச் செல்லும். மைசூரிலிருந்து செல்லும் யானை நாளைய தினம் இரயில் மூலம் பம்பாய்க்குச் செல்லுகிறது.

கச்சா 'பிலிம்' உற்பத்தி

இரண்டாம் திட்டப்படி முயற்சி

புதுடில்லி, ஜூலை 28—

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் உற்பத்தி இலாகாவின் திட்டப்படி, கச்சா பிலிம்கள், மற்றும் 'போட்டோ'வுக்குத் தேவையான பிலிம்கள் உற்பத்தி செய்யப்படலாம் என்று கூறப்படுகிறது.

தனிப்பட்டவர்கள் அத்தகு பிலிம் உற்பத்தியில் ஈடுபடுவார்களானால், அதற்கு சர்க்காரின் முழு ஆதரவும் கிடைக்கும் என்றும் கூறப்படுகிறது.

உடன்கட்டை ஏறும் வதந்தியின் எதிரொலி!

துப்பாக்கிப்பிரயோகத்தில் நால்வர் பலி

போலீசாருக்கு எதிராக நாக சாதுக்கள் மக்களைத் தூண்டினர்

இந்தூர், ஜூலை 31—

போலீசார் மீது கற்களை எறிந்தும், போலீசார் வண்டியின் மீது துப்பாக்கிக் குண்டுகளைப் பொழிந்தும் கலவரம் செய்ய முற்பட்ட பெருங் கூட்டம் ஒன்றின்மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததின் விளைவாக நால்வர் கொல்லப்பட்டிருக்கின்றனர்; பலர் படுகாயமுற்றிருக்கின்றனர்.

கூட்டத்திலிருந்த சாதுக்கள் இருவரின் தூண்டுதலின் பேரிலேயே, கூட்டத்தினர், போலீசார் மீது தாக்குதலைத் துவங்கினராம். மாவட்ட போலீஸ் அதிகாரி கல்லெறியால் காயமடைந்தாராம்.

ஜெந்த் குன்வார்பாய் என்ற ஒரு பெண்மணி, நோயால் ஏற்கனவே அவதியுறும் தன் கணவன் கடந்த 29-ந் தேதியன்று பாம்பு கடியால் இறந்துபடுவார் என்றும், அதற்கு அடுத்த நாள், தான் உடன்கட்டை ஏறுகிற 'சதி' செய்யப் போவதாகவும் அறிவித்திருந்தாராம்.

இந்தப் பெண்மணி, தன் கணவன் இறக்கப்போவதாக, 'ஜோசியம்' கூறியது மட்டுமின்றி, தானும் செத்துமடியப் போவதாக அறிவித்ததைக் கேட்டு, அக்கம் பக்கத்து ஊரார் எல்லாரும் அந்த 'புண்ணியச் செயலை'க் கண்ணாரக் காணத் திரண்டனராம்.

தகவல் தெரிந்த அதிகாரிகளும், போலீசாரும், நோய்வாய்ப் பட்டிருந்த அந்தப் பெண்ணின் கணவரான சித்தானந்தா என்பவரை, இந்தூரில் உள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றதுடன், ஜெந்த் குன்வார் பாய் என்ற அந்தப் பெண்மணியையும் உடன் கூட்டிச்சென்றுவிட்டனராம்.

பின்னர், கூடியிருந்த மக்களுக்கு, 'கணவனும்—மனைவியும் சுகமே இருக்கிறார்கள்; குன்வார் பாய் 'சதி' செய்துகொள்ளப் போவதில்லை,' என்று செய்தி கூறியிருக்கின்றனர்.

மருத்துவமனை அதிகாரியும், பத்திரிகை நிருபர்களிடத்தில், குன்வார் பாய் உடன்கட்டை ஏறுவதாகக் கூறியதை மறுத்துவிட்டதுடன், அவர் கணவரும் சுகமடைந்து வருவதாகவும் கூறினராம்.

ஆனாலும், மக்கள் கூட்டம் அதிகரித்துக் கொண்டே இருந்ததாம்

முன்னெச்சரிக்கையாக, போலீசார் இந்தச் செய்தியை ஆயிரக்கணக்கான துண்டுப் பிரசுரங்கள் மூலமும், ஒலி பெருக்கி மூலமும் விளம்பரம் செய்தனராம்.

மக்கள், போலீசாரின் செய்தியை நம்பவில்லையாம்.

'அந்தக் கணவனையும் மனைவியையும் காணவேண்டும்,' என்று துடித்தனராம்.

சித்தானந்தா உயிருடன் இருக்கிறார் என்பதை, கூட்டத்தினர் நம்பவே மறுத்துவிட்டனராம்!

நிலைமை முற்ற ஆரம்பித்திருக்கிறது; போலீசார் பலத்தபாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றனர்.

கணவனையும், மனைவியையும் காணவேண்டுமென்று கூடியிருந்த கூட்டம் சுமார் 2 லட்சம் பேர்கள் கொண்டதாம்.

இந்த நேரத்தில், 'கணவனையும்—மனைவியையும் நமக்குக் காண்பிக்க மறுக்கும் போலீசாரைத் தாக்குங்கள்,' என்று நாக சாதுக்கள் இருவர் கூட்டத்தினரைத் தூண்டிவிட்டனராம்.

விளைவுதான் துவக்கத்தில் குறிப்பிடப்பட்ட சோக நிகழ்ச்சிகள்!

இப்போது சம்பவம் நடைபெற்ற உஜ்ஜெயின் மாவட்டத்தைச் சேர்ந்த தக்ரால் கிராமத்திலும், அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் 144 தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதாம்.

'கர்பியூ' உத்தரவு அமுல் செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த தகவல்களை, மத்திய பாரத் சர்க்காரின் குறிப்பொன்று கூறுகிறது.

தகராறு முடிவுற்றது

குளித்தலை விவசாயிகள்—மிராசுதாரர் சமரசம்

திருச்சிராப்பள்ளி, ஜூலை 30—

குளித்தலை தாலுகாவில், மிராசுதார்கள்—விவசாயிகள் ஆகியோரிடையே இருந்துவந்த தகராறுகள் முடிவு பெற்றுவிட்டனவாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களிடையே ஏற்பட்ட ஒப்பந்தம் ஒன்றின்படி, விவசாயிகள், மிராசுதாரர்களுக்குத் தரவேண்டிய குத்தகை பாக்கித் தொகையை 3 தவணைகளாகத் தரவேண்டுமென்றும், உடனடியாக முதல் தவணையைத் தந்துவிட்டு, பாக்கித் தொகையை வருகிற அறுவடை காலங்களில் இரண்டு தவணைகளாகத் தந்துவிடுவதெனவும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

இது தவிர, விவசாயிகள் மிராசுதார்களுக்குக் கொடுக்கவேண்டிய நெல் குத்தகைப் பாக்கியில், 6-ல் 1 பகுதியை குறைத்துக்கொள்ளவும் ஒப்பம் தரப்பட்டிருக்கிறது.

57,000 ரூபாய் செலவில்

கீழமனைமுத்தாறின் குறுக்கே புதிய பாலம்

அம்பாசமுத்திரம், ஜூலை 28—

மணிமுத்தாறு அணைக்கு அருகில் சுமார் 4 கல் தொலைவில் உள்ள கீழமனைமுத்தாறு நதியின் குறுக்கே மஞ்சோலை எஸ்டேட் செல்லும் சாலையில் ஒரு புதிய பாலம் திறக்கப்பட்டுள்ளது.

மணிமுத்தாறு அணைத்திட்டத்தின் முடிவுறுங்காலை, மேற்படி சாலை, அணை நீரால் மூழ்கடிக்கப்பட்டுவிடும். எனவே, அந்தச் சாலையை அணைத் தேக்க மட்டத்திற்குச் சமமான பரப்பின் வழியாகத் திருப்பி விடுவதற்காகவே இந்தப் பாலம் கட்டப்பட்டிருக்கிறது.

ஒவ்வொன்றும் 30 அடி நீளம் கொண்ட 5 வளைவுகளால் பாலம் அமைக்கப்பட்டுள்ளதாகவும், பாலத்தின் குறுக்களவு 12 அடி என்றும் கூறப்பட்டிருக்கிறது.

இந்தப் பாலம் கட்டி முடிக்க ரூ. 57,000 செலவிடப்பட்டதென்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாப், ஆந்திராவுக்கு மத்திய நிதி உதவி

மத்திய ஆட்சியினர், பஞ்சாப் ஆந்திரா ஆகிய இரு மாநிலங்களுக்கும், மானியங்களும் கடன்களுமாக ரூ. 32,99,713 அனுமதித்துள்ளனராம்.

பாக். ரூபாய் மதிப்பு குறைக்கப்படுகிறது

ஆறுண்டு கால அமுல் 'தகர்ந்து'விட்டது!

பொருளாதாரக் காரணங்களுக்காக, பாகிஸ்தான் ரூபாயின் நாணய மாற்று மதிப்பைக் குறைத்துவிட பாக். சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

இதுவரையில் இந்திய ரூபாயை விட அதிக 'மதிப்பு'டன் இருந்த பாகிஸ்தான் ரூபாய், இந்த முடிவினால் இந்திய ரூபாய்க்குச் சமமாகிவிடுகிறது.

இனிமேல், ஒரு அமெரிக்க டாலருக்கு சுமார் ரூ. 4—12—0-தான் பாகிஸ்தான் ரூபாய் சமமாக இருக்கும்; இதுவரையில் ஒரு அமெரிக்க டாலருக்கு, பாக். நாணயப்படி ரூ. 5 கிடைத்துவந்தது.

1949 செப்டம்பரில், இந்தியா, பிரிட்டன் ஆகிய நாடுகள், தங்கள் செலாவணிகளின் டாலர் மதிப்பைக் குறைத்தபோது, பாகிஸ்தான் மாத்திரம் குறைக்கவில்லை.

மக்கள் சபையில் கைகலப்பு

பாதுகாப்பு அமைச்சர் விலகிவிட்டார்

டோக்கியோ, ஜூலை 31—

ஜப்பான் டியட் (பார்லிமெண்ட்) கூட்டம், குழப்பத்திலும், கைகலப்பிலும் இன்று முடிவடைந்ததாம்; இதனால் மேல்சபை நடைமுறை நிர்ணயக் குழுத் தலைவர் காயமுற்றாராம்.

இராணுவ சம்பந்தமான ஒரு மசோதா உட்பட பல முக்கியமான மசோதாக்கள், சலியாத பேச்சுக்களின் மூலமும், முட்டுக்கட்டை முறையிலும் தோற்கடிக்கப்பட்டனவாம்.

'பாதுகாப்பு கவுன்சில் ஏற்படுத்த வேண்டும்,' என்ற மசோதா உட்பட 12 மசோதாக்கள் இவ்விதம் முறியடிக்கப்பட்டனவாம்!

பாதுகாப்பு மசோதா தோற்கடிக்கப்பட்டதை ஆட்சேபனை செய்து, பாதுகாப்பு மந்திரி உடனே ராஜினாமா செய்துவிட்டாராம்!

'ஆக்கிரமிப்பு நிலை' அழிவுறுகிறது!

ஆஸ்திரியாவிலுள்ள சோவியத் படைகளைத் திருப்பி அழைக்கும் உத்தரவை, சோவியத் தற்காப்பு மந்திரி மார்ஷல் ஜுகாவ் பிறப்பித்துள்ளாராம்.

அதே நேரத்தில், ருமேனியா, ஹங்கேரி ஆகிய நாடுகளிலிருந்தும் எல்லா சோவியத் படைகளும் திரும்பப் பெறப்படும் என்று அந்நாட்டு சர்க்கார்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதாம்.

சோவியத் ரஷ்யாவிடமிருந்து எம். ஐ. ஜி. போர் விமானங்களை இந்தியா வாங்குமென யூகிக்கப்படுகிறது; பிரிட்டிஷ் விமானங்களையே இதுவரையில் இந்தியா வாங்கி வந்ததாம்.

இலங்கை இந்தியர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மேலும் அவர் குறிப்பிட்டதாவது:—

"இலங்கையில் உள்ள இந்தியர்களின் இப்போதைய நிலை மிகவும் நெருக்கடியானது; ஏனெனில் ஏராளமான பேர்களின் குடிஉரிமை மனுக்கள், மிகப் பலவீனமான காரணங்களைக் காட்டி நிராகரிக்கப்பட்டிருக்கின்றன;

"இந்தியர்—பாகிஸ்தானியர் பற்றிய இலங்கைக் குடி உரிமைச் சட்டம் உண்மையில் இப்போது சீர்குலைந்துவிட்டதாகவே நாங்கள் நினைக்கிறோம்; இலங்கை பாகிஸ்தானியர்களுக்குக் குடி உரிமை வழங்குவதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்ய, அந்தச் சட்டம் உபயோகமற்றதாகும்."

கழகக் கூட்டங்கள்

★

புழல்
கடைத் தெருவில்
(தி. மு. கழகம் எதிரில்)
4—8—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: எம். கணபதி
பேசுவோர்:
இரா. நெடுஞ்செழியன்
கண்ணதாசன்

★

கண்ணூமுச்சிக் கிராமம்
காவலாண்டியூர் மாரியம்மன்
கோவில் திடலில்
3—8—55 மாலை 6½ மணிக்கு
தலைவர்: ப. இராமலிங்கம்
திறப்பாளர்: இரா. தாண்டவன்
கொடியேற்றுபவர்:
எஸ். ஏ. அன்புக்கரசு
பேசுபவர்:
சிற்றுளி ஏ. சுப்பிரமணியம்

★

சத்தியவிஜயநகரம்

3—8—55 மாலை 6 மணிக்கு. தோழர் க. ஆனந்தன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் நாவேலு, கே. பி. சம்பத், டி ஆர் செகதீசன் ஆகியோர் பேசுவர்.

தி. மு. க. பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் துறையூர் வருகை

7—8—55 அன்று, துறையூர், பெரிய மாரியம்மன் கோவில் மைதானத்தில், தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும்.

வரவேற்பில், துறையூர் சுற்று வட்ட தி. மு. கழகக் கிளைகள் அனைத்தும் கலந்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பம்பாய் தி. மு. கழகப்

பொதுக்குழு உறுப்பினர்கட்கு

3—8—55 பிற்பகல் 1 மணியளவில், பம்பாய், சயன் ஆஸ்பத்திரிக்கு அருகிலுள்ள தோழர் அன்புசெழியன் இல்லத்தில், பம்பாய் தி. மு. கழகப் பொதுக்குழுக் கூட்டம் நடைபெறும்.

அல்ஜீரியா சம்பவம்

77 பேர் கொல்லப்பட்டனராம்

அல்ஜீரியாவில் நடைபெற்று வரும் விடுதலைப் போராட்டத்தினை ஒட்டி, 'புரட்சிக்காரர்கள்' என வர்ணிக்கப்படும் சிலர் நடத்திய தாக்குதல்களின் விளைவாக, ஆட்பாட்டக்காரர்களில் 30 பேர்களும், வெளிநாட்டுத் தூதவர் அலுவலகங்களைச் சேர்ந்த 23 பேர்களும் கொல்லப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

பிரெஞ்சுப் பிடியிலிருக்கும் அல்ஜீரியாவில் கடந்த இருதினங்களாக நடைபெற்ற சம்பவங்களில் மொத்தம் 77 பேர்கள்—54 புரட்சிக்காரர்கள் — 23 தூதவராலய ஊழியர்கள் — கொல்லப்பட்டனர் என்று பிரெஞ்சு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

கிறித்துவர் இந்து மதத்தை தழுவினாராம்!

'ஆரிய சமாஜ' வாதி நடத்தி வைத்தாராம்

நீவா, ஜூலை 29—

கடந்த 18 ஆண்டுகளாக கிறித்துவராயிருந்த குப்சர்த் என்பவர், தனது குடும்பத்தோடு இந்து மதத்தைத் தழுவியிருக்கிறாராம்.

ஹாமோஸ் எனுமிடத்தில் நடைபெற்ற 'சுத்தி' நிகழ்ச்சியின் போது, அவர் மதம் மாறினாராம்.

ஆரிய சமாஜ வாதியான டாக்டர் சூரி அகால் என்பவர், ஏராளமானோர் முன்னிலையில் இந்த மத மாற்றத்தைச் செய்துவைத்தாராம்.

'மக்கள் பேறு' இழந்தோம்!

மந்திரியிடம் மகளிர் கண்ணீர்!

மைசூர், ஜூலை 31—

ஹம்பாபூருக்கு அருகில் டட்டா கொப்பாலு கிராமப் பெண்கள், கைத் தொழில் மந்திரி அங்குவந்தபோது, 'கடந்த இரண்டாண்டு காலமாகத் தங்கள் கிராமத்தில் குழந்தையே பிறக்கவில்லை,' என்று அவரிடம் முறையிட்டுள்ளனர்.

தங்கள் கிராமத்தில், 200 அடிக்குக் கீழேதான் தண்ணீர் உள்ளதென்றும், சிரமத்துடன் இக்கிணறுகளிலிருந்து தண்ணீரை இழுப்பதால் தாங்கள் வலுவிழந்துவிட்டதாகவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

அடுத்த இரு ஆண்டுகளில், எல்லா கிராமங்களுக்கும் தண்ணீர் வசதி ஏற்படுமென அவர் அறிவித்தார்.

வெள்ளத்தால் ரூ. 1-கோடி சேதம்

திப்ருகார் ஜூலை 30—

மத்திய அசாமில் ஏற்பட்டுள்ள பிரம்மபுத்திரா நதி வெள்ளத்தினால், வீடுகள், சொத்துக்கள், பயிர்கள் முதலியனவற்றிற்கு ஏற்பட்டுள்ள சேதத்தின் அளவு சுமார் ஒரு கோடி ரூபாய் இருக்கலாம் என மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

என் உயிரைக்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மாநில சட்ட சபையில் 'சிவில்' வேலைகளுக்கான மானியக் கோரிக்கை பற்றிய விவாதத்தின் போதுதான் இந்த நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது.

கர்னூலில் சட்ட சபைக் கட்டிடம் எழுப்புவது, விசாலாந்திர அமைப்பை எந்த வகையாலும் தடுக்காது. மேலும், நான், எனது அருமை நண்பர் ஒருவரையும் இழந்துவிட விரும்பவில்லை என்று சஞ்சீவி ரெட்டி கூறி, அந்த அங்கத்தினரைச் சாந்தப்படுத்தியிருக்கிறார்.

மேலும், விசாலாந்திரம் அமைக்கப்பட்டபின், கர்னூலே தொடர்ந்து அதன் தலைநகராயிருக்க வேண்டுமென எவருமே விரும்பமாட்டார்கள் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

திருமணம்

கடந்த 10—7—55ல், குடந்தையில், தோழர் பெருமாள்—தோழியர் பட்டு திருமணம் தோழர் கே. கே. நீலமேகம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் இன்னும் பலர் மணமக்களை வாழ்த்தியும், பாராட்டியும் பேசினர். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 2 தரப்பட்டது—வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருத்தம்

28—7—55 'நம் நாடு' இதழில், சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பகச் சார்பில் துணைப் பொதுச் செயலாளர் என் வி. நடராசன் அவர்களுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில், கைத்தறித் துணிகள் அணிவித்த கிளைகளில், '2-வது வட்டத்தைச் சேர்ந்த தாளமுத்து நடராசன் முன்னேற்ற மன்றம்' என்றிருப்பதை, 3-வது வட்டத்தைச் சேர்ந்த மன்றமாகத் திருத்திக் கொள்க.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.